தேர்ச்சி : 12 - இரண்டாம் குடியரசு யாப்பு - தேர்ச்சி மட்டம் (12.1, 12.2)

1978 யாப்பின் சட்டத்துறையின் இயல்பு அதிகாரங்கள் பணிகள் என்பவற்றை ஆராய்க.

1978 யாப்பின் கீழ் சட்டத்துறையானது பாராளுமன்றம் என்றழைக்கப்படுகின்றது. இது தனி மன்றினைத் கொண்டதாகும் அம்மன்றம் தேசிய அரசுப் பேரவையினைப் போன்று முழுமையாக மக்கள் பிரதிநிதிகளை மட்டும் கொண்ட மன்றமாக இருப்பதில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் தேசியப் பட்டியலிலிருந்து நியமிக்கப்படும் உறுப்பினர்கள் ஆகிய இரு பகுதியினரைப் பிரதிநிதிகளாகக் கொண்டுள்ளது.

1978 யாப்பின் மீது கொண்டுவரப்பட்ட 14 ஆம் திருத்தத்தின்படி பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆகும் என்று உறுப்புரை 62(1) குறிப்பிடுகின்றது. இவர்களுள் 196 பேர் விகிதசமப் பிரதித்துவ முறையின் மூலம் மக்களால் தெரிவு செய்யப்படுகின்றனர். எஞ்சிய 29 பேரும் தேசியப்பட்டியல் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு அவ்வக்கட்சிகள் நாட்டில் பெற்றுக்கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப அக்கட்சிகளிலிருந்து நியமிக்கப்படுவர். இவ்வங்கத்தவர்களைத் தெரியும் போது விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை பின்பற்றப்படுகிறது.

தற்போது பாராளுமன்றின் ஆயுட்காலம் 5 வருடங்களாகும் (19ம் திருத்தம்) இதன் பிரகாரம் 5 வருடங்களுக்கொரு முறை பாராளுமன்ற அங்கத்தவரைத் தெரிவதற்கான பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால் பாராளுமன்றம் விரும்பினால் தனது ஆயுட்காலத்தை $\frac{2}{3}$ பெரும்பான்மை மூலமும் மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பில் மக்கள் அங்கிகாரத்துடன் ஒரு பொதுத் தேர்தலை நடத்தாது தனது ஆயுட்காலத்தை நீடிக்கலாம்.

யாப்பின் மீது கொண்டுவரப்பட்ட 19 ஆம் திருத்தத்தின்படி பாராளுமன்றம் $4\frac{1}{2}$ வருடங்களின் பின் ஜனாதிபதியின் விருப்பின் பேரில் கலைக்கலாம் அதன்படி தற்போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.

2 ஆம் குடியரசு யாப்பின் பாராளுமன்றம் முன்னைய சட்டத்துறையை விடவும் பிரித்தானிய சட்டத்துறையை விடவும் பல வகையில் வேறுபடுகின்றது. 1978 இற்கு முன் இலங்கையில் நிலவிய கபினட் முறையின்படி சட்ட நிர்வாகத்துறைகளுக்கிடையில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. சட்டத்துறை அங்கத்துவரே நிர்வாகத்துறையில் இடம்பெற்றனர். சட்டத்துறையின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரை நிர்வாகத்துறை பதவியிலிருக்கலாம். 1978 யாப்பின்படி நிர்வாகத்துறை அவ்வாறில்லை நிர்வாகத்துறையின் பிரதான பதவியாகிய ஜனாதிபதி பொது மக்களால் தெரியப்படும் அதேவேளை அதன் பதவிக்காலம் சட்டத்துறையில் தங்கியிருக்காது நிலையானதாக இடம்பெறுவதால் தற்போதைய சட்டத்துறை நிர்வாகத்துறையை பதவியிழக்கச் செய்யும் ஒன்றாக விளங்குவதில்லை.

பாராளுமன்றின் சட்டவாக்க அதிகாரம்

2 ஆம் குடியரசு யாப்பின் கீழ் பாராளுமன்றம் சட்டவாக்க அதிகாரத்தை மட்டும் பெற்ற தாபனமாகும். முதலாம் குடியரசு யாப்பின் சட்டத்துறை முத்துறை அதிகாரங்களையும் பெற்றிருந்தது. சட்டவாக்க அதிகாரத்தை நேரடியாகவும் நிர்வாக, நீதி அதிகாரங்களை அதற்கென தாபிக்கப்பட்ட தாபனங்களினூடாகவும் பிரயோகித்தது. தேசிய அரசுப் பேரவைக்கு நிகராக அதிகாரம் பெற்ற வேறெந்தத் தாபனமும் அங்கு

காணப்படவில்லை. இதன்படி தேசிய அரசுப் பேரவை இறைமை மிக்க தாபனமாக விளங்கியது. ஆனால் 2 ஆம் குடியரசு யாப்பின்படி பாராளுமன்றம் தேசிய அரசுப் பேரவையைப் போன்று அல்லது பிரித்தானியப் பாராளுமன்றத்தைப் போன்று இறைமை உடையதாக இருக்கவில்லை.

யாப்பின் முதலாம் அத்தியாயத்தின்படி "முத்துறை அதிகாரங்களும் பிரிக்கப்பட்ட அதற்கென தாபிக்கப்பட்ட தாபனங்களிடம் ஒப்படைக்கப்பட்டது" அதன்படி பாராளுமன்றம் சட்டவாக்க அதிகாரத்தைப் பெற்ற தாபனமாயினும் அது மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பில் மக்களுக்கும் பங்கு வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அதிகாரத்தை ஜனாதிபதியும், நீதி அதிகாரத்தை நீதிமன்றங்களும் பிரயோகித்தது.

2 ஆம் குடியரசு யாப்பின் கீழ் பாராளுமன்றம் வகிக்கும் நிலையை அது பெற்றுள்ள சட்டவாக்க அதிகாரத்தில் காணலாம். 75 ஆம் சரத்துப்படி கடந்த காலத்தைப் பாதிக்கும் சட்டங்களையும் யாப்பில் ஏதேனும் சரத்துக்களை மாற்றும் அல்லது நீக்கும் அல்லது புதிய ஏற்பாட்டைச் சேர்க்கும் சட்டங்களை விட அனைத்துச் சட்டங்களையும் ஆக்கும் அதிகாரத்தை பாராளுமன்றம் பெற்றுள்ளது.

ஆனால் அரசியலமைப்பை முழுமையாகவோ பகுதியாகவோ இடை நிறுத்தும் சட்டத்தையும் உருவாக்குகின்றது. சட்டமானது ஏற்கனவே உள்ள யாப்பை மாற்றீடு செய்ய அல்லது ஒரு புதிய அரசியலமைப்பை இயற்றினால் ஒழிய யாப்புச் சரத்தை முழுமையாக நீக்குகின்ற சட்டத்தையாக்கும் அதிகாரம் சட்டத்துறைக்கு வழங்கப்படவில்லை.

இந்த ஏற்பாடு சட்டத்துறையின் சட்டவாக்கு அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதாக அன்றி சட்டவாக்கம் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனையே இது குறிக்கின்றது. இதன்படி யாப்புச் சட்டம் உட்பட ஏதாவது ஒரு சட்டத்தை ரத்துச் செய்யவும் ஏதாவது 1 புதிய சரத்தினை யாப்பு ஒன்றினை உருவாக்குவதன் மூலம் கொண்டுவரவும் பழைய யாப்பை ஒழுக்கும் அதிகாரத்தையும் பாராளுமன்றம் பெற்றுள்ளது.

பாராளுமன்ற சட்டவாக்க அதிகாரத்தில் நியதிக்கட்டுப்பாட்டு அதிகாரம் மிக முக்கியமானது 89 ஆம் சரத்தின்படி யாப்பின் சில ஏற்பாடுகளை மாற்றவோ ரத்துச் செய்யவோ பாராளுமன்றத்திற்கு முழு அதிகாரம் வழங்கப்படவில்லை. யாப்பின் 1 - 3, 6 - 11 வரையுள்ள சரத்துக்களை பாராளுமன்றம் ஏகமானதாகக் கூட மாற்றவோ, ரத்துச் செய்யவோ முடியாது. பாராளுமன்றத்தினதும் ஜனாதிபதியினதும் ஆயுட்காலத்தை அவற்றிற்கான தேர்தல்களை நடத்தாது மேலும் நீடிக்கவும் முடியாது. மேற்கூறிய ஏற்பாடுகளில் மாற்றம் செய்ய வேண்டுமானால் சம்பந்தப்பட்ட சட்ட மூலம் பாராளுமன்றத்தில் $\frac{2}{3}$ பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டு சர்வஜனவாக்கெடுப்பில் பெரும்பான்மையைப் பெறவேண்டும். இது பாராளுமன்றின் சட்டவாக்க அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் அதேவேளை சட்டவாக்க அதிகாரத்தில் பொதுமக்களுக்கும் பங்கு வழங்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டுகின்றது.

புதிய யாப்பின் நெகிழ்ச்சித் தன்மையும் சட்டவாக்க அதிகாரத்தைக் கட்டுப்படுத்துகின்றது. அதன் பிரகாரம் பாராளுமன்றம் சாதாரண சட்டங்களை ஆக்குவது போன்று யாப்புத் திருத்தச் சட்டங்களை நிறைவேற்ற முடியாது. அதற்காக பாராளுமன்றத்திற்கு சமூகமளிக்காத உறுப்பினர் உட்பட $\frac{2}{3}$ பெரும்பான்மையைப் பெற வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

84 ஆம் சரத்துப்படி யாப்பிற்கு ஒவ்வாத சட்டம் நிறைவேற்றப்பட்டால் அந்தச் சட்டம் யாப்புச் சட்டமாக கருதப்படாத அதேவேளை யாப்புடன் ஒவ்வாதிருக்கின்ற பகுதி நீக்கப்படவும் கூடாது. இவ்வாறான ஏற்பாடு புதிய யாப்பில் புகுத்தப்பட வேண்டியன் காரணம் இலங்கை போன்ற நாடுகளில் சமூக பொருளாதார பிரச்சினைகளைத் தடுப்பதாகும்.

தற்போது பின்பற்றப்படும் விகீதாசார பிரதிநிதித்துவ முறையில் எந்தவொரு கட்சியும் $\frac{2}{3}$ பெரும்பான்மை பெறுவது கடினமாகும். அதனால் யாப்புத் திருத்த முறை மேலும் பலம்வாய்ந்ததாக காணப்படுகின்றது.

www.lkedu.lk

எனவே யாப்பின் நெகிழ்ச்சித் தன்மை பாராளுமன்ற சட்டவாக்க அதிகாரத்தை கட்டுப்படுத்துவதாக அமையும்.

2 ஆம் குடியரசு யாப்பின் 157 ஆம் சரத்து பாராளுமன்றின் சட்டவாக்க அதிகாரத்திற்கு சவாலாக அமைகின்றது. இதன்படி பாராளுமன்றில் சமூகமளிக்காத அங்கத்தவர் உட்பட $\frac{2}{3}$ பெரும்பான்மையால் நிறைவேற்றப்படும் ஒரு தீர்மானத்தின்படியே இலங்கை அரசாங்கத்திற்கும் - வெளிநாட்டு அரசாங்கம் ஒன்றிற்குமிடையிலும், வெளிநாட்டு தனிப்பட்டவருக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையிலும் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கும் இலங்கை அரசிற்குமிடையிலும் நடைபெறும் ஒப்பந்தங்கள் நாட்டின் பாதுகாப்பு, நாட்டின் நலன் கருதி அன்றி வேறு எந்த வகையிலும் நீக்கும் அதிகாரத்தைப் பெறவில்லை. இந்த ஏற்பாடு இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு ஊக்கமளிப்பதற்காக புகுத்தப்பட்டது. இந்தப் பொருளாதாரக் கொள்கையின் முக்கிய அம்சமாகக் கருதப்படும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான உத்தரவாதத்தினை வழங்கும் நோக்கில் இவ்வேற்பாடு புகுத்தப்பட்டது.

1978 அரசியலமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டத்துறை சட்டத்தை ஆக்கும் அதிகாரம் காணப்பட்ட போதும் அவ்வதிகாரத்தை நிறைவேற்றுத்துறையின் தலைவரான ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. இதன்படி சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுக்கிடையில் அதிகாரப் பிரிப்பொன்று காணப்படவில்லை என்பதோடு சட்டத்துறை நிறைவேற்றுத்துறையின் ஆதிக்கத்திற்கு உட்படும் நிலையினை ஏற்படுத்தியது. இது 1978 யாப்பு தொடர்பாக முன்வைக்கப்பட்ட பாரிய குற்றச்சாட்டாகும். அதனால் 19 ஆம் திருத்தத்தின் மூலம் இந்தத் தொடர்பினை மாற்றியமைத்து சட்டத்துறை ஒப்பீட்டு ரீதியாக சுயாதீனத்தை மீண்டும் உருவாக்கிக் கொண்டது.

வினா : 1978 யாப்பின் கீழ் ஜனாதிபதியை பாராளுமன்றத்துடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

ஜனாதிபதியும் பாராளுமன்றமும்

சரத்து 42 - அரசியல் யாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு தொடர்பான சட்டம் உள்ளிட்ட மேலும் எழுதப்பட்ட சட்டங்கள் என்பவற்றின் கீழ் தாம் நிறைவேற்றும் அதிகாரங்களும் பணிகளும் தொடர்பாக ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

இந்த ஏற்பாடுகள் நடைமுறை ரீதியான பெறுமதி வாய்ந்தவை என்று கருதமுடியாது. காரணம், ஜனாதிபதி பாராளுமன்றின் உறுப்பினராக இல்லாமையினால் அவர் பொறுப்பை மீறினால் அதனை எதிர்த்து, பொறுப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்படாமையாகும். ஜனாதிபதியின் செயற்பாடுகளைப் பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்ப முடியுமாயினும் அது சாபாநாயகரின் அனுமதியொடு முன்வைக்கப்படும் ஒரு விஷேட பிரேரணையின் மூலமே மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு குற்றப் பிரேரணையின் மூலம் பாராளுமன்றத்தினால் பதவி விலக்க முடியும். அது மிகவும் கடினமான ஒரு செயன்முறை ஆகும். இதனால் 42 ஆம் சரத்துப் பெயரளவினதானதும் பெறுமதி இல்லாததுமான ஓர் யாப்பு அலங்காரமாக மட்டுமே காணப்பட்டது.

சரத்து 65(1) - சரத்தின்படி பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகிறார். (அரசியல் அமைப்புப் பேரவையின் சிபாரிசின் பெயரில்)

65(1) சரத்து - பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்தின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன் அவரை பதவியிலிருந்த அகற்றும் அதிகாரம் ஜனாதிபதி பெற்றுள்ளார். எனினும் அவ்வதிகாரத்தினைப் பின்வரும் ஏற்பாடுகளுக்கு அமையப் பிரயோகிக்க வேண்டும்.

அ) செயலாளர் நாயகம் நோய்வாய்ப் பட்டிருத்தல் அல்லது உடல் உள ரீதியாகப் பலவீனப்பட்டிருத்தல்.
ஆ) செயலாளர் நாயகத்திற்கு எதிராக பாராளுமன்றம் ஒரு பிரேரணையை நிறைவேற்றியிருத்தல்.

65(6) சரத்து - இதன்படி செயலாளர் நாயகம் தமது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்ற முடியாத

போது அவருக்குப் பதிலாக பதில் கடமையாற்றுவதற்கு பிறிதொருவரை ஜனாதிபதி நியமிப்பார். 70 சரத்து ஜனாதிபதி பாராளுமன்றத்தினைக் கூட்டுவார், கலைப்பார், ஒத்திவைப்பர். (இம்மூல யாப்பின் ஏற்பாடு 19ஆம் திருத்தத்தின் மூலம் மாற்றப்பட்டுள்ளது)

அ) ஒத்திவைத்தல் - 70(2) சரத்துப்படி பாராளுமன்றத்தினை ஒத்திவைத்தல் தொடர்பாக ஜனாதிபதி வெளியிடும் அறிவித்தலில் பாராளுமன்றம் மீண்டும் கூட்டப்படும் தினம் குறிப்பிடப்பட வேண்டும். அத்தினம் அறிக்கை வெளியிடப்பட்ட தினத்திலிருந்த இரண்டு மாதத்தினை விஞ்சுவததாக இருத்தல் ஆகாது.

ஆ) கலைத்தல் - ஜனாதிபதி 70 ஆவது சரத்தின் அ, ஆ, இ, ஈ பகுதிகளில் குறிப்பிட்டவாறே பாராளுமன்றைக் கலைக்க வேண்டும்.

- பொதுத் தேர்தலின் பின்னர் புதிதாகக் கூட்டப்படும் பாராளுமன்றம் நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தின் மூலம் வேண்டப்பட்டால் ஒழிய தெரிவு செய்யப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட கால முடியும் முன்னர் பாராளுமன்றை கலைத்தலாகாது.
- பொதுத் தேர்தலின் பின்னர் பாராளுமன்றம் கூட்டப்படும் முதலாவது தவணையின் போது சமர்ப்பிக்கப்படும் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் பாராளுமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டால் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தலாகும்.
- ஜனாதிபதிக்கு எதிரான ஒரு குற்றப் பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருக்கும் போது ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்தலாகாது.
- வருடாந்த வரவு வெலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்டால் பாராளுமன்றத்தினைக் கலைத்தலாகாது. ஆனால் இரண்டாவது முறையும் அது நிராகரிக்கப்பட்டால் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும்.

33(அ) சரத்து - அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை பாராளுமன்றத்தில் வாசித்தல்.

33(அ) சரத்து - பாராளுமன்றத்தின் சடங்கு முறையான கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல்.

மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக ஜனாதிபதி கபினட் ஊடாகவே பாராளுமன்றத்துடன் தொடர்பு கொள்கின்றார். கபினட் ஜனாதிபதியையும் பாராளுமன்றத்தையும் இணைக்கும் இணைகரமாகும். மறுபுறம் ஜனாதிபதியின் மீது பாராளுமன்றத்துக்குள்ள ஒரே ஒரு அதிகாரம் அவருக்கு எதிராக குற்றிப் பரேரணை சமர்ப்பித்தலாகும். எனினும் அது எவ்வகையிலும் எளிதான பெயன்முறை அல்ல. ஜனாதிபதிக்கும் பாராளுமன்றுக்குமிடையிலான இந்தத் தொடர்புகளைப் பார்க்கும் போது நிறைவேற்று அதிகாரத்தினை கபினட் ஊடாகவும் பெரும்பான்மைப் பலம் இருப்பின் தமது கட்சியின் ஊடாகவும் தான் விரும்பியவாறு கட்டுப்படுத்தும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார். ஆனால் மறுபுறம் ஜனாதிபதியின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கான வாய்ப்பு குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

வினா : இரண்டாம் குடியரசு யாப்பின் கீழ் ஒப்பங்கோடல் பற்றி ஆராய்க.

ஒப்பங்கோடல் என்பது ஒரு நேரடி ஜனநாயக முறையாடும். சுவிச்சர்லாந்தின் கன்ரன்களிலும் அமெரிக்காவின் சில மானிலங்களிலும் மக்கள் அபிப்பிராயத்தை அறிவதற்காக மக்கள் அனைவரையும் பங்கேற்கச் செய்து. வாக்களிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. சர்வதேச சட்டத்தின்படி தமது நிலையினைப் பற்றித் தீர்மானிப்பதற்கு வாய்ப்பு வழங்கும் ஒரு முக்கிய வழிமுறை என்ற வகையில் ஒப்பங்கோடல் அறிமுகம் செய்யப்படுகின்றது.

ஆனால் சில நாடுகளில் தனியுரிமையினை உருவாக்கிக் கொள்வதற்கு மக்கள் அங்கிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் ஒரு வழிமுறையாக ஒப்பங்கோடல் பயன்படுத்தப்படுவதனால் அரசியல் அறிஞர்கள் இது பற்றி மிகக் கவனமாக கவனத்தில் எடுக்கின்றனர். பிரான்சில் முதலாம் மூன்றாம் நெப்போலியன் போன்ற சர்வாதிகள் மக்களின் ஜனநாயக அதிகாரத்தை கீழ்படுத்தி சர்வாதிகாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு இம்முறையைப் பயன்படுத்தினர். கானாவில் நிக்றுஸமாவின் ஆட்சிக் காலத்தில் நடாத்தப்பட்ட ஒப்பங்கோடல் இவ்வாறான ஒப்பங்கோடலுக்கு அண்மைக்கால உதாரணங்களாகும்.

இரண்டாம் குடியரசு யாப்பில் காணப்படும் ஒப்பங்கோடல் இவ்யாப்பின் ஒரு புதிய அம்சமாகும். இலங்கையில் எந்த சந்தர்ப்பத்தில் ஒப்பங்கோடல் நடாத்தப்பட வேண்டும் என யாப்பு 83 ஆம் சரத்து குறிப்பிடுகின்றது.

1) யாப்பில் 1 - 3, 6 - 11 வரையுள்ள சரத்துக்களில் திருத்தங்களோ, மாற்றங்களோ செய்யப்படும் போதும் பாராளுமன்றத்தினதும் ஜனாதிபதியினதும் ஆயுட்காலத்தை அதற்கென விதிக்கப்பட்ட நேரத்தில் தேர்தல் ஒன்றை நடாத்தாது மேலும் நீடிக்க மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பொன்று நடாத்தப்பட வேண்டும். மேற்கூறிய விடயங்கள் சம்பந்தமாக சட்ட மூலங்கள் பாராளுமன்றத்தில் $\frac{2}{3}$ பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டு அவை மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பொன்றில் மக்களின் அங்கிகாரத்தைப் பெற வேண்டும்.

2) ஜனாதிபதி விரும்புகின்ற சந்தர்ப்பத்திலும் ஒப்பங்கோடல் நடாத்தப்படலாம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என எந்தவொரு விடயத்தையும் ஜனாதிபதி வாக்கெடுப்பிற்கு விடலாம். மேலும் ஜனாதிபதி விரும்புகின்ற எந்தவொரு சட்டத்தையும் பாராளுமன்றத்திற்கு விடவும் ஜனாதிபதி விரும்பாத பாராளுமன்றம் நிறைவேற்றும் எந்த விடயத்தையும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என ஜனாதிபதி கருதினால் அவ்வாறான சட்டங்களை சர்வஜன வாக்கெடுப்பிற்கு விட்டு மக்களின் அபிப்பிராயத்தை அறியலாம்.

3) யாப்பின் உயர் நீதிமன்றம் வழங்கும் சில தீர்ப்புக்களின் அடிப்படையிலும் ஒப்பங்கோடல் நடாத்தப்படுவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பாராளுமன்றம் யாப்போடு சம்பந்தப்பட்ட சட்ட மூலம் ஒன்றை சமர்ப்பிக்கும் போது அதில் காணப்படும் யாப்புப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட அச்சட்ட மூலம் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால் அச்சட்ட மூலம் பாராளுமன்றில் $\frac{2}{3}$ பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டு சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் அங்கிகாரத்தைப் பெறலாம்.

இவ்வாறு மேற்கூறிய 3 சந்தர்ப்பங்களிலும் இடம்பெறும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்றின் அதிகாரம் கட்டுப்படுத்தப்படும் அதேவேளை சட்ட வாக்கத்தில் பொது மக்கள் பங்கு பற்றுவதற்கான சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மக்கள் நேரடியாகப் பங்கு பற்றி தமது அதிகாரத்தை செலத்த முடிகின்றது. இதன் மூலம் மக்களின் அரசியல் பங்கு பற்றுதல் அதிகரித்து அவர்களின் அரசியல் அறிவு வளர்கிறது.

இவ்வாறு இம்முறையில் பல நன்மைகள் காணப்படுகின்ற போதிலும் இலங்கை போன்ற குறை விருத்தி நாடுகளுக்கு தாங்க முடியாத ஒரு ஆடம்பர முறையாக இது காணப்படுகின்றது. இம்முறை அடிக்கடி பயன்படுத்தப்பட்டால் இலங்கை போன்ற நாடுகளால் தாங்க முடியாது. மேலும் அரசியல் அறிவுபடைத்த மக்கள் வாழும் நாட்டில் சர்வஜன வாக்கெடுப்பு வெற்றிகரமாக நடாத்தப்பட முடியும். ஆனால் அரசியல் அறிவு குறைந்த ஒரு நாட்டில் இம்முறையைப் பயன்படுத்தும் போது அரசியல் வாதிகளால் இது துஸ்பிரயோகம் செய்யப்படலாம்.

1983 இல் இலங்கையில் நடாத்தப்பட்ட ஒப்பங்கோடல் நாம் பெற்றுக்கொண்ட ஒரு மோசமான அனுபவமாகும். அந்த ஒப்பங்கோடாலின் போது அரச அதிகாரம் முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான உரிமையின் மீது தடைகள் ஏற்படுத்தப்பட்டன. அவ்வொப்பங்கோடல் வன்முறைச் சந்தர்ப்பம் ஒன்றில் நடாத்தப்பட்டமையினால் வழங்கப்பட்ட மொத்த வாக்குகளின் அளவு குறைந்தது. அவ்வொப்பங்கோடலின் மூலம் நடைபெறவிருந்த பாராளுமன்றத் தேர்தல் பிற்போடப்பட்டு 1977 இல் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றின் பதவிக் காலம் மேலும் 6 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டது.